Vol.26 | No. 6 | June 2022

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



Migrants' Meet, Chennai, May 1, 2022




Pulari Educational and Charitable Trust,
Anniversary & Inter Religious Meet, May 28, 2022



May Month Devotion to Mary, Conclusion, Little Flower Church, Manjalumoodu, May 31.2022



Uraviyam, Training for the Leaders, Nithiravilai Forane, May 03, 2022



Uraviyam, Training for the Leaders, Soosaipuram Forane, May 06, 2022

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 26 No :6 JUNE 2022



# இறையருள்
# IRAIARUL

## Editorial Board

Patron

His Excellency

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Joseph Santhosh**

Associate Editors

**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Iyathurai**
**Mr. Jesin Joseph**

Published by:

**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**

Designed by:

**Jesin J Joseph**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

Bishop's Message 02
தமிழக ஆயர் பேரவை - சுற்றுமடல் 07
ஆயர் சுற்றுமடல் 13
மறைக்கல்வி 16
மிஷன் லீக் 18
குழந்தை ஈசோ இயக்கம் 19
இளையோர் இயக்கம் (SMYM) 21
இளையோர் கல்விப் பணியகம் (TYES) 23
இல்வாழ்வு இயக்கம் 24
வின்சென்ட்-தே-பவுல் சபை 26
சமூக சேவை சங்கம் (KKSSS) 27
புனித அல்போன்சா கல்லூரி 30
மறைமாவட்ட செய்திகள் 33
மறைவட்ட செய்திகள் 35
Birthdays and Feastdays of Fathers 46
Bishop's Engagements 47

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

**Ref. No. Priests/GR/134/2022**

**31 May 2022**

**Dear Readers,**

Greetings from Bishop's House, Thuckalay!

Sacred Heart 'was born' from the visions of the French Visitation nun, Sr Margaret Mary Alacoque, to whom Jesus appeared and showed her his Heart in June 1675 while she was contemplating on the Blessed Sacrament. Jesus' message to Sr Alacoque was very clear: "Behold this Heart, which has loved humankind so much… and in return has received from the greater number nothing but ingratitude." He then asked her to set aside the Friday after Corpus Christi, for a special honour to his Heart.

After receiving this message, Sr Alacoque interpreted it as a call to conversion and began to live a life of severe self-mortification in order to atone for the ingratitude of humanity towards the love of Christ. She insisted that at the heart of her devotion was the selfless, sacrificial love of Christ towards all, which was calling humankind to love one another other just as Christ loved them. She warned against the punishment and consequences that ensue when we do not love one another.

We only need to look around the world today and see how this prophecy is true; most of the pain, the sickness, the hunger, the violence, the hatred, etc., are consequences of our lack of love for one another. Divisions, cliques, and tensions 'with-in' the Church and in our communities, stem from our lack of love for one another. All these are signs of our ingratitude towards Christ!

As Alacoque tried to tell her story and describe her vision, she

was met with strong resistance, beginning with her own Sisters in her religious community and extending to the wider authorities of the Church. Her message, calling us to conversion was not what people wanted to hear. Jansenism was very popular at the time, especially in France and Belgium, as its Founder, the Belgian Catholic Bishop, Cornelius Jansen, had taught that 'good actions' (love) did not have any active role to play as far as salvation was concerned. He said all we needed to do, was to pray and devote ourselves to the 'graces of God and to the Sacraments of the Church'. It took a long time before the devotion to the Sacred Heart was finally given an official liturgical feast in 1765 by Pope Clement XIII, thanks to the help and support of the Jesuit Fathers who were very critical of the teachings of Bishop Jansen.

Though Jansenism was condemned in 1713, its followers continue to live among us in the Church today. There are many of us who still emphasise 'Christian prayer' and 'Sacraments' over and above the command 'to love' and 'to serve'. It is important to strike a healthy balance between the two. 'Prayer' and 'Sacrament' are not salvation in themselves but are pointers (real symbols) helping and guiding us towards God, the Reality which they represent. As Matthew 25 reminds us, 'salvation' is not through 'words andgestures' (liturgy) alone but through concrete acts of 'loving service' towards our neighbour; for 'Faith' and 'Action' are but two sides of the same coin (cf. James 2:18).

The love of God may well be a choice by God who is utterly free and not bound in any way, but it remains a love for those who are unworthy. It is a searching love. There is an absurdity about it. There is no way of possibly explaining the absurdity of the figure of Christ upon the cross because the explanation is found in an equally absurd love. From this foolishness of God came our salvation. Jesus breathed forth the Spirit as he died upon the cross. From his wounded side flowed the life-giving waters of baptism and the precious blood of the Eucharist. In giving up his life he gave it up not just for us, but to us. We are so used to baptism and Eucharist that we forget that they are issued forth from his broken

body and his pierced heart. We are so used to our life in the Spirit that we forget that it is only the one who died who breathed forth his Spirit for all of us. After his death he rose and returned to the Father, and then with the Father sent the Spirit to us so that all of the love which led to his birth and to his death would finally reach our hearts.

We are reminded today that, in the Sacred Heart is revealed the mystery of the Divine Mind of Jesus as God. The Feast of the Sacred Heart of Jesus affirms Jesus was God-man, is one of the Three Divine Presences of the Holy Trinity. While the symbolic picture of the human heart echoes a Heart of Flesh of the human nature, the "Divine Mind" that is synonym to "Sacred Heart," echoes the Divine nature. As the Holy Catholic Church teaches, in Christ, God manifested as man, the Divine nature cannot be separated from the human nature. Today, let us express our love to this sacred Heart to whom are families are consecrated and place our total trust in him and run to him in our problems and need. This sacred heart which is burning with love for us will protect us and care for us and give us the peace and tranquillity.

Christ, in his appearances to Margaret Mary, promised many blessings to those who practice devotion to his Sacred Heart. Accordingly, Jesus promises all the graces necessary for their state of life; peace in their families; consolation in all their troubles; their refuge in life and especially in death; abundantly bless all their undertakings; he will be infinite ocean of mercy. He promised to bless those places wherein the image of the Sacred Heart will be exposed and venerated and will give to priests the power to touch the most hardened hearts. Finally, the promise that his all-powerful love will grant to all those who will receive Communion on the First Fridays, for nine consecutive months, the grace of final repentance: they will not die without receiving the sacraments; and the Sacred Heart will be their secure refuge in that last hour.

Thus, we can say that we belong to a religion of love, the religion of the Sacred Heart of Jesus. In this Sacred Heart of Jesus, we can see His sufferings, His Cross, His humility, His forgiveness, His victory in the Resurrection, His infinite Love for us. The Sacred Heart of Jesus is the summary, the condensation of the Gospel. Because of that, Jesus said: “Learn of me, because I am meek and humble of heart.” All Christian teaching, we can find in the Sacred Heart of Jesus. Let us hear the Sermon of the Mount from the Sacred Heart of Jesus: blessed are the meek, blessed are the merciful, the clean of heart, they who suffer persecution. Behold the Sacred Heart of Jesus, meek, merciful, innocent, and suffering patiently all the persecutions, the example of all these beatitudes. But the most important demonstration of the love of the Sacred Heart of Jesus is the Holy Eucharist. “Jesus . . . having loved His own who were in the world, He loved them unto the end.” Jesus in the Holy Eucharist is the companion of our exile, by His real presence: “Come to me, all you that labour and are burdened and I will refresh you.” He is for us the God of consolation.

When reflecting on the atoning sacrifice of Jesus we are reminded of the model life of St Maximilian Kolbe, who was canonized in October 1982. Born in Poland in 1894, when he was old enough to answer God’s call, Maximilian joined the religious congregation of the Franciscans. By 1927, he had founded a house for those who wished to enter the religious life. In 1941, while appointed as the superior of the Polish community, he was arrested by the Gestapo and imprisoned at Auschwitz. Twelve weeks after his arrival at the prison camp, a prisoner escaped. In retaliation, ten men were chosen at random to die of starvation. One of the chosen men was a young father. Shining in the love of Jesus, Father Maximilian offered to take the place of the young man. The offer was accepted and on 14 August 1941, Fr Maximilian died of starvation after suffering with nine others in the prison. In this act of self-sacrifice, we perceive true Christian love. Here, one man gave his life for another on the Day of Judgment, when the young father was condemned to death. Those who obeyed the commandments of God as Fr Maximilian obeyed them; they have come to know God.

In them, the love of God has reached perfection. By embracing the same obedience to the Commandments in the love of Jesus Christ, we know that we are in Jesus and that Jesus is in us.

Let us cultivate a filial devotion to the Sacred Heart of Jesus and inculcate the same devotion among our people in our parishes and institutions especially during this month of June!

As the missionary work in the extended territories of our Eparchy is taking shape with the help of missionaries from other Eparchies and Congregations, let us become aware of the important role that evangelization plays in the Church. It is not an optional add-on. It is at the very heart of what it means to be Church. Yet, in spite of this clear mandate, we may still be tempted to respond to this call to evangelization by saying that "Catholics evangelize with how they live their lives, not by our words." We may even quote the words attributed to St Francis of Assisi: "Preach the gospel at all times; use words if necessary." But this does not mean that we can choose between proclaiming and living the Gospel, as if they both accomplish the same thing. Paul VI went on to explain in Evangelization in the Modern World the important interplay between word and witness in this way: "The Good News proclaimed by the witness of life sooner or later has to be proclaimed by the word of life. There is no true evangelization if the name, the teaching, the life, the promises, the kingdom and the mystery of Jesus of Nazareth, the Son of God are not proclaimed." Let us be enthused by these words of the saintly Pope and re-commit ourselves to the task of spreading the message of Christ in season and out of season!

Yours in Christ Jesus,

BISHOP GEORGE RAJENDRAN sdb * Diocese of Thuckalay *

† George Rajendran SDB
Bishop of Thuckalay

# "சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்" மறைசாட்சி தேவசகாயம் புனிதர் பட்டம் தேசிய அளவிலான நன்றி அறிவிப்பு கொண்டாட்டம் ஜூன் 05, தூய ஆவியார் பெருவிழா

"நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்" (1தெச 4:3) என்று கூறி தூய்மை நிலைக்கு அனைவரையும் அழைக்கும் "ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து உங்களுக்கு அருளும் அமைதியும் உரித்தாகுக" (எபே 1:2).

இவ்வாண்டின் மே திங்கள் 15ஆம் நாள் இந்தியத் திரு அவைக்கு, அதிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு திரு அவைக்கு தனிச் சிறப்புமிக்க நாள். தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயம் அவர்களின் புனிதர் பட்ட நிகழ்வு அன்று நடக்கவிருக்கின்றது. தமிழக மக்கள் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரந்திருக்கும் தமிழ்கூறும் நல்லுலகம் அனைத்திற்கும் இது ஒரு அக்களிப்பின் நாள்.

மறைசாட்சி தேவசகாயம் இந்திய மண்ணிலே தம் இரத்தத்தைச் சிந்தி மறைசாட்சி மகுடம் பூண்ட முதல் இந்தியர் அவர். இந்தியத் திரு அவையின் முதல் பொதுநிலைப் புனிதர்; முதல் இல்லறப் புனிதர். தமிழகத் திரு அவையின் முதல் புனிதர். இப்படி பற்பல முதன்மைகளைக் கொண்ட நம் புனிதர் தேவசகாயம் என்பதனை உணர்ந்து தூய்மை நிலையின் ஊற்றாம் கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

## நம்பிக்கை நிறைந்த நல்வாழ்வு

நம் புனிதர் தேவசகாயம் தமிழ்நாட்டின், குமரிமாவட்டத்தின் நட்டாலம் என்னும் அழகுறு கிராமத்தில் 1712-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் பிறந்தார். தம் முதல் குழந்தை இவருக்கு பெற்றோர்கள் இட்ட பெயர் "நீலம்" என்பதாகும். இப்பெயர் "நீலகண்டன்" என்றும் சொல்லப்பட்டது.

## கல்வி, பயிற்சி

கடவுள் நம்பிக்கை நிறைந்த குடும்பம் அது. தேவையான சொத்து சுகங்களை கொண்டு வாழ்ந்திருந்தவர்கள். எனவே சிறுவன் நீலகண்டனுக்கு நற்கல்வி கிடைத்தது. தமிழ், மலையாளம் மற்றும் சமஸ்கிருதம் மொழிகளைக் கற்றார். இளமையிலேயே நல்ல போர்ப் பயிற்சியையும், குறிப்பாக, தற்காப்புக் கலைகளாகிய சிலம்பம், அடிமுறை மற்றும் வர்மக் கலையினையும் ஆசான்களிடமிருந்து கற்றுக் கொண்டார்.

## ஏற்ற பணிகள்

நீலகண்டன் முதலில் சிறிதுகாலம் படை வீரனாகச் சேர்ந்தார். அப்பணியில் சிறந்து விளங்கினார். இளைஞனாக இருந்தபோதே அரசனின் அரசவையிலும் பணியமர்த்தப்பட்டார். நம்பத்தக்கக் கருவூலப் பணியாளனாகத் திகழ்ந்தார்.

**திருமணம்:** நீலகண்டனின் 27-ஆம் வயதில் மேக்கோடு என்னும் ஊரைச் சேர்ந்த பரமேஸ்வரன், அனந்தேஸ்வரி ஆகியோரின் மகள் பார்கவி என்பவரைப் பெற்றோர், பெரியோர்களின் ஏற்பாட்டின்படி முறைப்படி திருமணம் முடித்து இல்லறம் மேற்கொண்டார். இல்லற வாழ்வில் மகிழ்வுடன் ஈடுபட்டிருந்தார். தம் நிலத்தையும், ஆடுமாடுகளையும் பார்த்துவந்த அந்தக் காலத்தில் மிகுந்த தாழ்ந்தவர்களாகவும் ஏறக்குறைய அடிமைகளாகவும் நடத்தப்பட்ட மக்களிடம் அவர் நெருங்கிப் பழகினார்.

## குளச்சல் போர், டிலனாய் வருகை

இக்கால கட்டத்தில்தான், 1741ஆம் ஆண்டு துறைமுக நகராம் குளச்சலில் மார்த்தாண்ட வர்மாவின் திருவிதாங்கூர் படைகளுக்கும் ஆக்கிரமிக்க வந்த டச்சுப் படைகளுக்கும் இடையே போர் ஏற்பட்டது. அப்போரில் டச்சுக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அச்சூழலில் டச்சுப் படையிலிருந்து 24 பேர் மார்த்தாண்ட வர்மாவிடம் சரணடைந்து போர்க் கைதிகள் ஆயினர். திருவிதாங்கூர் படையில் சேர்ந்து மன்னனுக்கு விசுவாசமாக இருந்து பணியாற்ற வாக்குறுதி அளித்ததால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களுள் ஒருவர் பெனதிக்து டிலனாய் என்னும் கத்தோலிக்கர். திருவிதாங்கூர் படையை நவீனப்படுத்தவும், மண்கோட்டைகளைக் கற்கோட்டைகளாக்கவும் டிலனாய்க்குப் பொறுப்பு தரப்பட்டது. அவ்வாறு அரண்மனையைச் சுற்றி உதயகிரிகோட்டை கட்டும் அலுவல் நடந்தது. அந்தப் பணிகளின்போது, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொறுப்பு கருவூல அலுவலரான நீலகண்டரிடம் இருந்தது.

## துன்பம் எனும் சோதனை

நீலகண்டன் - பார்கவி அம்மாள் குடும்பம் சில நட்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. எவ்வாறெனில், வானம் பொய்த்துப்போக, பயிர்கள் கரிந்து போயின. நல்ல மாடுகள் சில நோயுற்று மடிந்து போயின. இதனால் கவலை கொண்டனர் தம்பதியர். மக்கள் செல்வமும் இன்னும் பிறக்காத நிலையில் வேளாண் தொழில் இழப்பும், கன்றுகாலிகளின் இறப்பும் இக்குடும்பத்தை வருத்தத் தொடங்கியது. இதனால் நீலகண்டன் மிகவும் கவலையோடு காணப்பட்டார். அவரோடு உரையாடி ஆற்றுப்படுத்தி, விவிலிய மாந்தர் யோபுவின் வரலாற்றை எடுத்துக் கூறினார் டிலனாய். டிலனாயின் நற்செய்தி விளக்கத்தினால் தெளிவு பெற்றார் நீலகண்டன். நீலகண்டன் தான் திருமுழுக்குப் பெற விரும்புவதாக தம் நண்பர் டிலனாயிடம் சொன்னார். நீலகண்டனின் உறுதியை அறிந்துகொண்ட டிலனாய், அவரை

வடக்கன்குளத்தில் இருந்த நேமம் மிஷன் தலைவர் சேசுசபை அருள்பணி யொவான்னி பத்திஸ்தா புத்தாரியிடம் அனுப்பினார்.

தந்தை புத்தாரி 9 மாதங்களாக நீலகண்டனுக்கு மறைக்கல்வி கற்றுத் தந்தார். மே 14, 1745-இல் திருமுழுக்குப் பெற்று தேவசகாயம் ("லாசரஸ்" என்னும் பெயரின் தமிழாக்கம்) என்று மாறினார். அவருடைய ஞானத்தந்தை ஞானப்பிரகாசம் என்பவர். தொடர்ந்து ஒப்புரவு பெற்று முதல் திருவிருந்தும் பெற்றுக் கொண்டார்.

## புதுக் கிறித்தவர் தேவசகாயத்தின் வாழ்க்கை

திருமுழுக்கு தேவசகாயத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. தன் இதயத்திலும் வாழ்விலும் பெரும் மகிழ்ச்சியை அனுபவித்தார் தேவசகாயம். தான் பணியாற்றிய மன்னனின் அரண்மனையில் தம்மை எல்லாரும் "தேவசகாயம்" என்று அழைக்கச் சொன்னார். கிறித்தவ வழிபாடுகளிலும் அருளடையாளங்களிலும் பெரும் ஈடுபாட்டுடன் பங்கேற்றார். ஒரே கடவுளின் பிள்ளைகள்தாம் எல்லாரும் என்று உணர்ந்தார். சாதி வேற்றுமை கொடும் பாவம் என்றும், தீண்டாமை அதனினும் கொடியது என்றும் உணர்ந்து, எல்லா மக்களிடமும், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடமும் நல்லுறவு பாராட்டினார். சாதி அடையாளங்களையும், மரபுகளையும், சாதிச் சட்டங்களையும் மீறினார். “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்று தான் சந்தித்த அனைவரிடமும் தமது புதிய நம்பிக்கையை எடுத்துரைத்தார் தேவசகாயம். அவரது சாட்சியத்தால் அவரது மனைவி பார்கவி அம்மாள் திருமுழுக்கு பெற்று "ஞானப்பூ" என்னும் பெயர் பெற்றார். ("தெரசா" என்னும் பெயரின் தமிழாக்கம்). அவ்வண்ணமே படைவீரர் சிலரும் மனம் மாறினர்.

## குற்றச்சாட்டும் கைதும்

இவை அனைத்தும் தவறாகத் திரித்துக் கூறப்பட்டு மன்னருக்குத் தெரிவிக்கப்பட்டது. புதிய நம்பிக்கையை மேற்கொண்டு, புதிய வழிபாடுகளை அவர் பின்பற்றியது "தெய்வ துரோகம்" என்று சொல்லப்பட்டது. சமுதாய சமத்துவத்தை அவர் கைக்கொண்டு வாழ்ந்ததும், சாதி மறுப்புச் செய்ததும் "குலத் துரோகம்" என்று தீர்ப்பிடப்பட்டது.

புதிய நம்பிக்கையை எல்லாம் விட்டுவிட மன்னவன் கூற, அதை ஏற்காமல் தம் கிறித்தவ நம்பிக்கையில் உறுதியாக இருந்ததை "ராஜதுரோகம்" என்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுடன் அவர் உறவுகொண்டு வாழ்ந்ததைத் தீட்டு என்று சொல்லி அத்தீட்டுப்பட்ட நிலையில் அவர் அரண்மனைக்குள் வரக்கூடாது என்றார்கள். பல்வேறு தவறான குற்றச்சாட்டுகளுக்காக 28.2.1749-இல் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

## வன்கொடுமைகளும் மறைசாட்சியமும்

கைது செய்யப்பட்ட தேவசகாயம் அனைத்துப் பொறுப்புக்களிலுமிருந்து நீக்கப்பட்டார். அவரது சொத்துக்களின் உரிமையும் அவருக்கு மறுக்கப்பட்டது.

ஆளுநர்முன் நடந்த விசாரணையின்போது, தமது புதிய நம்பிக்கையை மறுக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களோடு பழங்குவதைத் தவிர்க்கவும் மறுத்தார். உடனே அவரைச் சாவுக்குத் தீர்ப்பிட்டார்கள். அதோடு திருவிதாங்கூர் அரசில் உள்ள உள்நாட்டு லத்தீன்சபைக் கிறித்தவர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

இரண்டுமுறை சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டாலும் மூன்றாம் முறைதான் அவர் கொல்லப்பட்டார். அதற்கிடையில்

- திருவிதாங்கூர் அரசின் எட்டு தாலூக்காக்களுக்கும் இழுத்துச் செல்லப்பட்டு விசாரணையும் பல்வேறுவிதமான வன்கொடுமைகளுக்கும் உள்ளானார். கைகள் கட்டப்பட்ட நிலையில், எருக்கம் மாலை அணியப்பட்டு, எருமைமீது அமர்த்தப்பட்டு பல ஊர்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டார்.
- முள்சாட்டையாலும், தடிகளாலும் அடிக்கப்பட்டார்.
- காயங்களில் மிளகு வத்தல் பொடி அல்லது சாந்து தேய்க்கப்பட்டது
- ஏழு மாதங்கள் திறந்த வெளியில் மரத்தில் கட்டப்பட்டுக் கிடந்தார்.
- கைது செய்யப்பட்டது முதல் இறப்பு வரை நீராடவோ, குளிக்கவோ, முடி வெட்டிக்கொள்ளவோ, சவரம் செய்து கொள்ளவோ அனுமதிக்கப்படவில்லை. பசிக்கும் தாகத்துக்கும் உட்படுத்தப்பட்டார்.
- மக்களின் கண்களில் படாதவாறு வெவ்வேறு சிறைகளுக்கு மாற்றப்பட்டு, இறுதியில் ஆரல்வாய்மொழி சிறையில் அடைக்கப்பட்டார்.
- அத்தனை துன்பங்களிடையேயும் தேவசகாயம் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். எந்த கோபமோ, எரிச்சலோ, சோகமோ அவரை ஆட்கொள்ளவில்லை.
- தம் பாடுகளில் தம் மனைவியையும் மறக்காமல் மூன்று நான்குமுறை வரச் சொல்லி சந்தித்தார்.
- ஏறக்குறைய மூன்றாண்டளவாக நீராட அனுமதிக்கப்படாமல் இருப்பினும் அவரது உடலிலிருந்து எந்த நாற்றமோ, நெடியோ வீசவில்லை.

இறுதியாக, ஆரல்வாய்மொழி காற்றாடிமலைக்குக் கொண்டு செல்லப்பட்டு 1752ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14ஆம் தேதி நள்ளிரவில் 5 குண்டுகளுக்கு

இரையாகி மறைசாட்சியாய் தன்னுயிரைத் தந்தார்.

அவரது உடல் காட்டு விலங்குகளுக்கு இரையாகப் போடப்பட்டது. ஐந்து நாட்களுக்குப்பின் அவ்வுடலின் எஞ்சிய பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன. அப்பொழுதே புகழ் பெற்றிருந்த கோட்டாறு புனித சவேரியார் ஆலயத்தில் (இன்று கோட்டாறு மறைமாவட்டப் பேராலயம்) நடுப் பீடத்திற்குமுன் மறைசாட்சியின் உடலின் எஞ்சிய பகுதிகள் அடக்கம் செய்யப்பட்டன.

## அன்றுமுதல் இன்றுவரை

மறைசாட்சியின் சாவு தொடக்க முதலே ஒரு மறைசாட்சியமாகவே மக்களால் பார்க்கப்பட்டு வந்துள்ளது. எனினும் திரு அவையின் அதிகாரப்பூர்வமான அறிவிப்புக்கான விண்ணப்பம் 2003-ஆம் ஆண்டில்தான் முறையாக தமிழகத் திருஅவையின் பரிந்துரையோடு அனுப்பப்பட்டது.

2012-ஆம் ஆண்டு மறைசாட்சி தேவசகாயம் மறைசாட்சியாக அறிவிக்கப்பட்டு அருளாளர் நிலை அடைந்தார். தொடர்ந்து நடந்த ஆய்வுகளில் நமது மறைசாட்சி தேவசகாயத்தின் பரிந்துரையால் அற்புத நிகழ்வு ஒன்று திருத்தந்தையால் 2020ஆம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு, வருகிற மே மாதம் 15ஆம் நாள், பாஸ்காவின் 5ஆம் ஞாயிற்றுக் கிழமையன்று வத்திக்கானில் திருத்தந்தையால் புனிதராக அறிவிக்கப்படும் இனிதான நிகழ்வு நடைபெற இருக்கின்றது.

## புதுப்புனிதர் நமக்குத் தரும் செய்தி

தமிழகத் திரு அவையின் தவப்புதல்வன் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர் நிலை அறிவிப்பு நம்மையே நாம் புதுப்பித்துக்கொள்ள நமக்கென்று பிறந்திருக்கும் ஒரு வாய்ப்பு. முதலாவது, நமது கத்தோலிக்கக் கிறித்தவ நம்பிக்கையில் நாம் ஆழமும் உறுதியும் கொள்வோம். இன்றைய சமூக, அரசியல் சூழலில் நமது நம்பிக்கை வாழ்வுக்கு எத்தனை எத்தனையோ சவால்கள் ஏற்பட்டுள்ளன. அவை அனைத்தையும் உறுதியுடன் ஏற்றுக்கொண்டு நம்பிக்கையினால் நாமும் நற்சான்றுகளாக மாற இயலும் (காண். எபிரே. 11.39).

இரண்டாவது, தமிழகத் திரு அவையில் இன்றும் நிலவும் தீமை சாதியின் அடிப்படையில் மக்கள் பிரிந்திருப்பதும், அந்தச் சாதி உணர்வுகளால் நடக்கும் குழப்பங்கள், ஏற்றத்தாழ்வுகள், கலவரங்கள் முதலிய தீமைகள். இச்சூழலில் "சமத்துவ நல்லறம் காட்டும் நம் இல்லறப் புனிதர்" தேவசகாயம் தரும் "சாதிகள் இல்லா சமத்துவம்" என்னும் செய்தி நம்மைத் தூண்டி எழுப்புகிறது: (கலா 3:27-28) என்ற இறைவார்த்தையின் இந்த அறைகூவல், புனித தேவசகாயம் தரும் இரண்டாவது முக்கியச் செய்தியாகும்.

மூன்றாவது, இணைந்து பயணிக்கும் திரு அவை என்னும் ஆயர் மாமன்றச் செய்தியும், இந்தப் பொதுநிலை, இல்லறப் புனிதர் நமக்கு விடுக்கும்

ஓர் அழைப்பாகவே தெரிகிறது. யாரையும் விளிம்பு நிலையினர் என்று தள்ளிவிடாமலும், வாழ்வுநிலைகளில் படிமுறை ஏற்றத் தாழ்வுகளையும், வகுப்புவாத மனநிலையையும் போக்கி "இணைந்து பயணிக்க" இந்த இல்லறப் புனிதர் நம்மை அழைக்கிறார்.

## புனிதர் நம்மை அழைக்கிறார். தேசிய நன்றி விழா

நம் இல்லறப் புனிதர் மறைசாட்சி தேவசகாயத்தின் புனிதர்நிலை அறிவிப்பினை இந்தியத் திருஅவை வருகின்ற ஜூன் 5ஆம் நாள், தூய ஆவியின் திருநாள் அன்று கொண்டாடுகின்றது. நம் புனிதர் மறைசாட்சி மகுடம் பூண்ட காற்றாடிமலைப் பகுதியில் இது நடத்தப்படுவது தனிச் சிறப்பாகும்.

திருத்தந்தையின் இந்தியத் தூதுவர் மேதகு லெயோபோல்டோ ஜிரெல்லி தலைமையேற்க, இந்தியத் திருஅவையின் பல்வேறு தலைவர்களான கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருள்பணியாளர்கள், இருபால் துறவியர் மற்றும் பொதுநிலையினர் திரளாகக் கலந்துக்கொள்ள இருக்கிறார்கள்.

பிற்பகல் 2.30 மணிக்கு கலை நிகழ்வுகளுடன் தொடங்கும் இக்கொண்டாட்டம் 5 மணிக்கு நடைபெறும் மாபெரும் ஆடம்பரத் திருப்பலியுடன் நிறைவு பெறும்.

கோட்டாறு மற்றும் குழித்துறை மறைமாவட்டங்கள் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்கின்றன. அவர்களுக்கு நம் இறைவேண்டலாலும், பொருள் உதவியாலும் நமது ஒத்துழைப்பை வழங்கலாம். ஆனால் மிக முக்கியமாக தமிழகமெங்குமிருந்தும் மக்கள் இந்திய நாடெங்குமிருந்து அங்குக் கூடிவரும் அனைவரோடும் இணைந்து, தமிழகத்தின் தவப்புதல்வன் மறைசாட்சி புனித தேவசகாயத்தை கொண்டாடுவோம். நிறை ஆசி பெறுவோம்.

இவண்
தமிழக ஆயர் பேரவை

தலைவர்
மேதகு பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி
சென்னை–மயிலை பேராயர்

செயலர்
மேதகு தாமஸ் பால்சாமி
திண்டுக்கல் மறைமாவட்ட ஆயர்

துணைத்தலைவர்
மேதகு இலாரன்ஸ் பயஸ்
தருமபுரி மறைமாவட்ட ஆயர்

**குறிப்பு: இச்சுற்றுமடல் 2022 மே 8ஆம் தியதி தமிழகமெங்கும் உள்ள ஆலயங்களில் வாசிக்கப்பட வேண்டும்.**

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்

# ஆயர் சுற்றுமடல்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

நம்முடைய நம்பிக்கையின் தந்தையாகிய மார் தோமா மறைசாட்சியாக இறந்ததன் 1950 ஆம் ஆண்டு நினைவை வருகின்ற ஜூலை 3 ஆம் தேதி சிரோ மலபார்த் திருச்சபை அனுசரிக்கிறது. இதைச் சிறப்பிக்கும் பொருட்டு, நமது மறைமாவட்டத்தில் வருகின்ற ஜூன் 5 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி ஜூலை மாதம் 3 ஆம் தேதி வரையிலான ஒரு மாதக் காலத்தை திருத்தூதர் மார் தோமா மாதமாக அனுசரிக்க இருப்பதை இம்மடல் வழியாக உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

நற்செய்திக்காக தன்னுடைய இரத்தத்தைச் சிந்திய மார்த்தோமாவின் இறப்பு நம்மைப் பொறுத்தவரைக்கும் பெரும் ஊக்க சக்தியாக இருக்கிறது. ஈசோவிடம் அவர் கொண்ட விசுவாசத்தை "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்னும் அறிக்கையின் மூலமாக உறுதியாக அறிக்கையிட்டார். "நாமும் செல்வோம் அவரோடு இறப்போம்" என நெஞ்சுறுதியுடன் கூறிய வீரராக நம்முடைய தந்தையானவர் விளங்குகிறார். அவர் நற்செய்தியின் பொருட்டு தன்னுடைய இரத்தத்தைச் சிந்தி இறந்ததன் நினைவை வருடந்தோறும் துக்ரானா என்னும் பெயரில் ஜூலை 3 ஆம் அனுசரித்து வருகிறோம். மார்த்தோமாவின் நற்செய்திப் போதனையின் வழியாக நம்பிக்கையை ஏற்றுக் கொண்ட மூதாதையர்கள் நம்மிடம் விட்டுச் சென்ற நற்செய்தியின் ஒளிச்சுடர் அணையாமல் சுடர் விட்டெரியச் செய்ய இந்த ஒரு மாத காலம் பேருதவியாக இருக்கும். பங்குகளும் துறவற இல்லங்களும் மற்று நிறுவனங்களும் இந்த ஒரு மாதக் காலத்தை மிகச் சிறப்பாக நடத்த தேவையான அனைத்து ஆயத்தங்களையும் செய்ய அன்புடன் அறிவுறுத்துகிறேன். இது மார்த் தோமாவைப் பற்றி அதிகமாக அறிந்துக் கொள்ளவும் அவரைப் பின்பற்றவும் உதவும். மேலும் காலத்தின் அடையாளங்களை கண்டுணர்ந்து, அதற்கேற்ப நற்செய்தி அறிவித்திட அவசியமாக இருக்கும் இறையருளுக்காக மார்த்தோமாவின் பரிந்துரையை நாடுவதற்கும் ஏற்ற காலமாக இருக்கும்.

ஈசோ மெசியாவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் நற்செய்தியை இதயத்தில் சுமந்தவாறு நமது தந்தையாகிய மார்த்தோமா இந்தியா நோக்கிக் கப்பல்

பயணம் மேற்கொண்டார். சேர-சோழபாண்டிய அரசுகளின் வணிக மையமாக விளங்கிய கொடுங்கல்லூரில் கி.பி. 52 ஆம் ஆண்டு வந்தடைந்தார். புரியாத மொழி, வேற்று மதங்கள் போன்றப் பலத் தடைகளைத் தாண்டி, தாம் சுமந்து வந்த நற்செய்தியை மன உறுதியுடன் அவர் போதித்தார். இதன் விளைவாக, கொடுங்கல்லூர், பாலையூர், பரவூர், கோக்கமங்கலம், நிரணம், நிலைக்கல், திருவிதாங்கோடு, கொல்லம் போன்ற இடங்களின் நம்பிக்கைக் கொண்டோரின் சமூகங்கள் உருவாகின. இதில் அரப்பள்ளி என்று அறியப்படும் திருவிதாங்கோடு ஆலயமானது நம்முடைய மறைமாவட்ட எல்லைக்குட்பட்டப் பகுதியில் மார்த்தோமாவால் ஏற்படுத்தப்பட்ட இறைச்சமூகம் இருந்ததற்கு அடையாளாகத் திகழ்கிறது. ஏறக்குறைய பத்து ஆண்டுகால நற்செய்தி போதனைக்குப் பின்னர், அவர் தமிழகத்தின் மைலாப்பூர் பகுதியை அடைந்து அங்கு நற்செய்தியைப் பறைசாற்றினார். சின்னைமலை என்னுமிடத்தில் ஒரு கற்சிலுவையையும் நிறுவினார். மார்த்தோமாவின் நற்செய்திப் போதனையை ஏற்றுப் பலர் திருமுழுக்கு ஏற்று கிறிஸ்தவர்களாயினர். இதை சமூகத்தின் பிரமுகர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. அவரைக் கொல்வதற்கான சதித்திட்டங்களைத் தீட்டினர். இறுதியில், சின்னமலையில் அவர் இறைவேண்டுதலில் ஈடுபட்டிருந்தப் போது குந்தத்தால் குத்தப்பட்டார். தொடர்ந்து புனித தோமையார் மலை என்று இன்று அறியப்படும் பரங்கி மலையில் கற்சிலுவையைக் கட்டி அணைத்தவாறு உயிர் துறந்தார். அவர் மைலாப்பூரில் அடக்கம் செய்யப்பட்டார். கல்லறை மைலாப்பூரில் அமைந்திருந்தாலும், அவருடைய உடலின் பகுதிகள் முதலில் சிரியா நாட்டில் எதேசாவுக்கும் பின்னர் இத்தாலியில் ஓர்த்தோனாவிற்கும் கொண்டுச் செல்லப்பட்டன. தற்போது அது இத்தாலியில் உள்ள ஓர்த்தோனா என்னும் இடத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

கல்வாரி மலையில் இரத்தம் சிந்திய ஈசோவிடமிருந்துப் பெற்றுக் கொண்ட நம்பிக்கையால் தூண்டப்பட்ட மார்த்தோமா தன்னுடைய இரத்தத்தையும் சிந்தினார். அதுமுதல் நம்முடைய சபையானது வளரத் தொடங்கியது. மார்த்தோமாவிடமிருந்து நம்பிக்கை ஒளியைப் பெற்றுக் கொண்ட பல சபைகளுள் நம்முடைய சீரோ மலபார் சபை தனிச்சிறப்பு மிக்கதாய் விளங்குகிறது. திருத்தொண்டுப் பணிக்காக தன்னை அர்ப்பணிப்பதில் இது முதன்மையான இடத்தில் உள்ளது. மார்த்தோமாவிடம் காணப்பட்ட நற்செய்தி ஆர்வத்தை நாமும் சொந்தமாக்கி திருத்தொண்டுப் பணிகளில் ஈடுபட வேண்டியது நம்முடைய கடமையாக இருக்கிறது. பாலஸ்தீனத்திலிருந்து பயணம் மேற்கொண்டு கொடுங்கல்லூர் வந்தடைந்து பல இடங்களில் நற்செய்தி பறைசாற்றிய மார்த்தோமாவின் திருத்தொண்டுப் பயணத்தை தொடர்ந்திட நாமும் அழைக்கப்பட்டுள்ளோம்.

மறைசாட்சியாக இரத்தம் சிந்திய மார்த்தோமாவின் 1950 ஆம் நினைவை அனுசரிக்கும் இவ்வேளையில், நம்முடைய மறைமாவட்டத்தில் நடக்கும் திருத்தொண்டுப் பணிகளை நினைவில் கொண்டு இறைவனிடம் வேண்டுவதோடு, அதன் வழியாக கிடைக்கப்பெற்றிருக்கும் அனைத்து நன்மைகளுக்காகவும்

இறைவனுக்கு நன்றி கூறுவோம். அத்துடன் நம்முடைய மறைமாவட்டத்தில் இந்த மார்த்தோமா மாதமானது, ஒவ்வொரு பங்குகளிலும் ஜூன் 5 ஆம் தேதி அன்று ஆடம்பரமான திருப்பலியுடன் ஆரம்பித்து, ஜூலை 3 ஆம் தேதி ஆடம்பரமான திருப்பலி மற்றும் பொதுக்கூட்டத்துடன் நிறைவடையும். இவ் ஒருமாத காலம் முழுவதும் திருப்பலிக்குப் பின்னர், மார்த்தோமாவை நோக்கிய பரிந்துரை வேண்டுதலை ஏறெடுத்திடக் கேட்டுக் கொள்கிறேன். நினைவுக் கொண்டாட்டம் சிறப்பாக நடந்திட பின்வரும் நிகழ்வுகள் பரிந்துரைக்கப்படுகின்றன. இந்நிகழ்வுகளில் இறைமக்கள் அனைவரும் பங்கேற்க கேட்டுக் கொள்கிறேன்.

மறைவட்ட அல்லது பங்களவில் திருவிதாங்கோடு அரைப்பள்ளிக்கு திருப்பயணம் மேற்கொள்ளுதல் (ஜூன் 11).

- பங்களவில் மார்த்தோமாவைப் பற்றிய பேச்சுப்போட்டி (ஜூன் 12)
- இளையோருக்காக, பங்களவில் ஆவணப்படப் போட்டி (ஜூன் 12)
- அருட்தந்தையருக்காகவும் அருட்சகோதரிகளுக்காகவும் ஒருநாள் கருத்தரங்கு (ஜூன் 18).
- மறைமாவட்ட அளவில் மாதர் ஜோதிஸ் இயக்கம் ஒருங்கிணைக்கும் மார்கம்களி நடனப்போட்டி (ஜூன் 26).
- குழந்தைகளுக்காக பங்களவில் திருவிவிலியப் பகுதி மனப்பாடம் செய்து ஒப்பித்தல் போட்டி (ஜூன் 19).
- மிஷன் லீக் குழந்தைகளுக்காக வினாடிவினாப் போட்டி (ஜூன் 20).

நம்முடைய மறைமாவட்டத்தில் மார்தோமா மாதம் அனுசரிக்கும் வேளையில், அது பயன்மிக்கதாக அமைய செபிக்குமாறு அன்போடு நினைவூட்டுகிறேன். நம்முடைய தந்தையாகிய மார்த்தோமாவைப் போல உயிர்த்தெழுந்த ஈசோவை மீட்பராகவும் ஆண்டவராகவும் ஏற்று அறிக்கை இடுவதோடு, ஈசோ இன்றும் வாழ்கிறார் என்னும் உறுதியான நம்பிக்கையுடன் நம்முடைய அன்றாட வாழ்க்கைச் சூழல்களில் நற்செய்திக்குச் சான்று பகர்வோம். திருத்தொண்டுப் பணியை அன்றாடம் முன்னெடுப்போம்.

ஆண்டவராகிய ஈசோ மெசியா உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
24.05.2022

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

**குறிப்பு: இச்சுற்றறிக்கையை 2022 மே 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை எல்லாபங்குகளிலும் திருப்பலிக்கு இடையே வாசிக்க வேண்டும். உறவியக் கூட்டங்களில் சுற்றறிக்கையை வாசிப்பதும் உகந்தது.**




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துகள்.**

***ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் :***

மறைக்கல்வி ஐந்து முதல் பத்து வரையிலான பாடத்திட்ட நூல்களானவை மொழியாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளை சேர்ந்த மாணவர்களுக்கு வகுப்புகள் எடுக்கும் ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி வகுப்புகளானவை 14.05.2022 அன்று படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, நூலின் பாதிப் பாடங்களின் உள்ளடக்கங்கள் விளக்கப்பட்டன. நிகழ்வானது,



மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்களின் தொடக்க செபத்துடனும், தொடக்கவுரையுடனும் ஆரம்பானது. இயக்குநர் தந்தை பிரின்ஸ் மாலியில் மற்றும் துணை இயக்குநர் தந்தை அபிலாஷ் சேவியர் ஆகியோர் பொறுப்பேற்று நிகழ்வுகளை ஒருங்கிணைத்தனர்.



அருட்தந்தையர் அபிலாஷ் சேவியர், ஜோசப் சந்தோஷ், அனில் ராஜ், ஆன்டணி ஜோஸ், டென்சி முண்டுநடைக்கல் மற்றும் வினு ஜோசப் ஆகியோர் முறையே ஐந்து முதல் பத்து வரையிலான பாடநூல்களை அறிமுகம் செய்து விளக்கினர். காலை 10 மணிக்கு ஆரம்பான பயிற்சி மாலை 4 மணிக்கு முடிவடைந்தது. இதில் 175 ஆசிரியர்கள் பங்கேற்றனர். அனைவருக்கும் மதிய உணவும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.



***விசுவாசப் பயிற்சி விழாவின் ஆசிரியர்களுக்கான வகுப்புகள்:***

விசவாசப்பயிற்சி விழா VPV-2022 மறைக்கல்வி மாணவர்களுக்குச் சிறப்பாக நடத்தும் நோக்குடன், ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி அளிப்பது வழக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு ஊரடங்கு நடைமுறையில் இருந்ததால் இப்பயிற்சிகள் அளிக்கப்படவில்லை. ஆனால் இணையம் வழியாக பயிற்சிகள் வழங்கப்பட்டன. இவ்வருடமும் மறைக்கல்வி YouTube வலையொளி வழியாக பயிற்சி வகுப்புகள் மே மாதம் 7 ஆம் தேதி முதல் ஒளிப்பரப்பப்பட்டன. வகுப்புகள் Sub-Junior, Junior மற்றும் Senior எனப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டன. பள்ளிக்கூடங்களில் 10, 11, 12 வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு தேர்வுகள் நிறைவுறாததால் Super Senior பயிற்சி வகுப்பு நடத்தப்படவில்லை. முதல் மூன்று பிரிவினருக்கும் முறையே, அருட்சகோதரி ரீஜா CMC, அருட்தந்தை ரோபின் ஜோசப், அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் ஆகியோரால் நடத்தப்பட்டது.

**இப்படிக்கு**

**அருட்தந்தை அபிலாஷ் சேவியர்**
**இயக்குநர்**

# மிஷன் லீக்

### *சிறுமலர் மிஷின்லீக் பவளவிழா*

சிறுமலர் இயக்கத்தின் தேசிய அளவிலான பவளவிழா கூட்டமானது, எர்ணாகுளம் காக்கனாட்டில் வைத்து, மே28 ஆம் தேதி சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர் கார்டினல் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகை அவர்கள் தலைமையில்



நடைபெற்றது. நிகழ்வானது காலை 7:30 மணிக்கு திருப்பலியுடன் தொடங்கியது. இக்கூட்டத்திற்கு மண்டலங்களின் இயக்குநர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். நமது மறை மாவட்டத்திலிருந்து இயக்குநர் அருள்தந்தை பிரிண்டோ குரியாஸ் மற்றும் பொறுப்பாளர்கள் அருள்தந்தை ஜோஸ் வயலில், அருள்சகோதரி ஆன்கிரேஸ், திரு. ஞானதாஸ், திரு. அஜி, திருமதி. சினேகலதா, திருமதி லதா ஆகியோர் கலந்துகொண்டனர்.

**இப்படிக்கு**

**அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்**

**இயக்குநர்**

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ

# குழந்தை ஈசோ இயக்கம்

## *ஆண்டு விழா*

2021-2022-ம் ஆண்டிற்கான குழந்தை ஈசோ இயக்க ஆண்டு விழாவானது 15.05.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2:30 மணியளவில் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து குருகுல முதல்வர் பேரருட் தந்தை. தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்கள் தலைமையில் இயக்குநர் தந்தை Fr. ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் முன்னிலையில் இறைவேண்டலுடன் ஆரம்பமானது. இல்வாழ்வு இயக்க இயக்குநர் Fr. ஜிம்மி தெக்கேகடுமத்தில், அருள்தந்தை. அனில் ராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். வருகை தந்த அனைவரையும் Fr. ஜோமோன் அவர்கள் வரவேற்றார். குருகுல முதல்வர் அவர்கள் தன்னுடைய உரையில், இயக்குநர் Fr. ஜோமோன் அவர்கள் செய்த ஏராளமான செயல்பாடுகளை எடுத்துக்கூறி வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்தார். புதிய பொறுப்பாளராக பொறுப்பேற்றுக் கொள்ளும் Fr. அனில் ராஜ் அவர்களுக்கு வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டது. மேலும் "குழந்தைகள் ஆன்மீகத்திலும், கலையிலும் வளர்ந்து வருவதை குழந்தை இயேசு இயக்கம் மூலம் அறியமுடிகிறது" என்பதையும் குழந்தைகளை ஆன்மீகத்தில் வளர்த்துவதில் பெற்றோர்களின் பங்கு என்ன? என்பதையும் விளக்கி கூறினார்.



தொடர்ந்து இல்வாழ்வு இயக்கத்தின் இயக்குநர் Fr.ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தன்னுடைய உரையில் குழந்தை ஈசோ இயக்கம் நல்ல முறையில் நடைபெற்று கொண்டிருப்பதாகவும், குழந்தைகளை ஆன்மீகத்திலும், பாடல், ஆடல் வழியாக குழந்தைகளை விசுவாசத்தில் வளர்த்த வேண்டும் என்று கூறி தன்னுடைய சிறுவயது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். குழந்தைகளின்

கலை நிகழ்ச்சிகள் இவ்விழாவில் இடம்பெற்றன. கதாப்பிரசங்கம், இறைவார்த்தை சொல்லுதல், செய்கை பாடல், குழு நடனம் போன்ற நிகழ்ச்சிகள் அரங்கேறின.

***பரிசுகள்:***

கலைவிழாவில் போட்டிகள் நடத்தி அவற்றில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. புனிதர்களின் படங்களை சேகரித்து அவரைக் குறித்து எழுதி Diary-ஆக (SaintsDairy) ஒப்படைத்த அனைத்து குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

***பிரிவு உபசார விழா:***

6 வருடங்களாக சிறப்பாக குழந்தை ஈசோ இயக்கத்தை வழிநடத்திக் கொண்டிருந்த அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்களுக்கு பிரிவு உபசார விழா கொண்டாடப்பட்டது. அருட்சகோதரி. சோனா SH, திருமதி. ஹேமா ஆகியோரால் வாழ்த்துரை கூறப்பட்டது. அருட்தந்தை அவர்கள்



கேக் வெட்டி அன்பின் பகிர்வை வெளிப்படுத்தினார். தொடர்ந்து தன்னுடைய ஏற்புரையில், குழந்தை ஈசோ இயக்கம் நல்ல முறையில் நடைபெற ஒத்துழைத்த மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களுக்கும், குருகுல முதல்வர் பேரருட் தந்தை தோமஸ் பௌவத்துபறம்பில் அவர்களுக்கும், அனைத்து அருட்தந்தையர்களுக்கும், ஆனிமேட்டர்ஸ் மற்றும் பொறுப்பாளர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்தார். மேலும் தன்னுடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டதோடு, புதிய இயக்குநர் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். தொடர்ந்து புதிய இயக்குநராக பொறுப்பேற்றுக் கொண்ட Fr. அனில் ராஜ் அவர்கள், அருட்தந்தை. ஜோமோன், அருட்தந்தை. ஜிம்மி அவர்களும் செய்த பணியை நான் தொடர்ந்து செய்வேன் என்றும் தன்னுடைய வாழ்த்துரையில் தெரிவித்தார். பின்னர் சூசைபுரம் வட்டார ஆனிமேட்டர் அருட்சகோதரி. டீனா (Teena) அவர்கள் நன்றியுரை கூறினார். இறுதியில் பாப்பரசர் கீதம் பாடப்பட்டு ஆண்டுவிழாவானது இனிதே நிறைவடைந்தது.

**இப்படிக்கு**

**அருட்தந்தை அனில் ராஜ்**

**இயக்குநர்**

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM

### *மறைமாவட்ட செயற்குழு கூட்டம்:*

தக்கலை மறைமாவட்ட சீரோ மலபார் இளையோர் இயக்க செயற்குழு கூட்டமானது 22.05.2022 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் பேரருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட பொறுப்பாளர்கள் 7 பேர் கலந்து கொண்டனர். அருட்தந்தை அவர்கள் குறும்படம் ஒன்றை காட்டி ஊக்குவித்தல் பயிற்சி வகுப்பினை நடத்தினார். அதைத் தொடர்ந்து மறைமாவட்டத்தினுடைய புதிய செயலராக மெரின் சுஜித், துணை செயலராக மெர்னிஷா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அதன்பின் கூட்டமானது ஜெபத்துடன் நிறைவு பெற்றது.

### *அலகு சந்திப்பு:*

மே மாதம் 22 ம் தேதி காலை 11 மணியளவில் பளுகல் புனித தோமையார் ஆலயத்தின் அலகு சந்திப்பு நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் மறைமாவட்ட தலைவர் மெர்பின் ஆகியோர் கலந்து கொண்டனர். பங்குதந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற அவர்கள் அனைவரையும் வரவேற்றார். அதைத் தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்கள் SMYM இயக்கத்தின் நோக்கம் பற்றியும் அதனுடைய வடிவமைப்பு பற்றியும் தற்போது அதனுடைய செயல்பாடு குறித்தும் விவரித்து கூறினார். இக்கூட்டத்தில் சுமார் 15 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

மே 29, 2022 அன்று காலை 10.30 மணியளவில் பிலாங்காலை புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தின் அலகு சந்திப்பு நடைபெற்றது. இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள் மற்றும் மறைமாவட்ட பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். பங்குதந்தை தோமஸ் தெக்கேத்தலா CMI அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். அதைத் தொடர்ந்து இயக்குநர் தந்தை அவர்கள் நமது இயக்கமானது ஒற்றுமையாக செயல்பட வேண்டும் என்பதை குறித்தும், நேர்மறையான கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை பின்பற்றி வாழ வேண்டும் என்பதை குறித்தும் விவரித்து பேசினார். அதை தொடர்ந்து சிறப்பு விருந்தினராக திருமதி வெளிச்சம் செரின்



அவர்கள் கலந்து கொண்டு இன்றைய சமுதாயத்தில் இளைஞர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகள் குறித்தும் சமூகத்தின் மாற்றத்திற்காக எவ்வாறு உழைக்க வேண்டும் என்பதை குறித்தும் கலந்துரையாடல் நடத்தினார். முடிவில் பபிஷா அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சிகளில் அருட்சகோதரி ஆன் மரியா FCC அவர்கள் உடன் இருந்தார். இயக்கக்கீதத்துடன் கூட்டம் நிறைவு பெற்றது. இக்கூட்டத்தில் 27 இளையோர்கள் கலந்து கொண்டனர்.

இவண்

மெரின் சுஜித், செயலர்

---

## இறை அழைத்தல் முகாம்

31-05-2022 முதல் 02 -06-2022 வரை இறை அழைத்தல் பயிற்சி முகாம் முக்கூட்டுகல் புனித மரியன்னை இளம் குருமடத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சி முகாமை பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் அவர்கள் வழி நடத்தினார்கள். 02 -06-2022 அன்று ஆயர் வருகை தந்து திருப்பலி நிறைவேற்றி பயிற்சி முகாமிற்கு வருகை தந்த மாணவர்களோடு உரையாடினார்கள். இப்பயிற்சி முகாமிற்கு 36 மாணவர்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்திருந்தார்கள்.




## தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம்
## Thuckalay Youth Educational Services in Collaboration with Trichy Vazhikatti

### *வாழ்க்கைத்திறன் பயிற்சி:*

பாலப்பள்ளம், கிறிஸ்து அரசர் ஆலயம் மறைக்கல்வி மாணவர்களுக்கான வாழ்க்கை வழிகாட்டிப் பயிற்சியானது 08.05.2022 அன்று நடைப்பெற்றது. விரிவுரையாளர்களாக அருட்தந்தை ஜோசப் சந்தோஷ், TYES இயக்குநர், மற்றும் திருமதி ஷீஜி, ஆகியோர் கலந்து கொண்டு வாழ்க்கை இலக்கைப் பற்றியும், தேர்வுக்கான தயாரிப்புப் பற்றியும் கருத்துரை வழங்கினர். இப்பயிற்சியில் 35 மாணவர்களும் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### *அழகுக்கலைப் பயிற்சி:*

கல்லுவிளை, தக்கலை இளையோர் கல்வி சேவை பணியகம் நடத்திய தொழில்முனைவோருக்கான அழகுக்கலைப் பயிற்சியானது கல்லுவிளை SMYM அலுவலகத்தில் வைத்து மே 17,18,19 ஆகிய மூன்று தினங்கள் நடைப்பெற்றது. இயக்கத்தின் இயக்குனர் தந்தை ஜோசப் சந்தோஷ் பயிற்சியினை தொடங்கி வைத்தார். அழகுக்கலை நிபுணர்களான திருமதி.சதிகா மற்றும் திருமதி.ஷைலா அவர்கள் கலந்து கொண்டுப் பயிற்சி அளித்தனர். அழகுக்கலைப் பயிற்சியில் 8 பெண்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.





# இல்வாழ்வு இயக்கம்



"இறைவா பிறரிடம் ஆறுதல் தேடுவதை விட, பிறருக்கு நான் ஆறுதல் தரவும். பிறர் என்னைப் புரிந்திட வேண்டுமென்பதை விட, நான் பிறரைப் புரிந்து கொள்ளவும். பிறர் எனக்கு அன்பு செய்தல் வேண்டுமென்பதை விட, பிறருக்கு நான் அன்பு செய்திடவும் உதவி செய்வீராக. ஏனெனில் தன்னல மறுப்பிலேதான் பொது நலமும், மன்னிப்பிலோ தான் பெருமன்னிப்பும், இறப்பிலேதான் மரணமில்லாப் பெருவாழ்வும் பெற முடியும்."

- புனித பிரான்சிஸ் அசிசி

### *இல்வாழ்வு இயக்கம்*

உலகிற்கு ஒளியாய் வாழ்வுக்கு வழியாய் திகழுகின்றது திருக்குடும்பம். அத்திருக்குடும்பத்தை போன்று குடும்பங்களிலும் ஒற்றுமையான குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்னும் நோக்குடனும் இவ்வியக்கம் செயல்பட்டு வருகிறது.

இவ்வியக்கத்தின் சார்பாக தம்பதிகளுக்கு ஏற்படும் கருத்து வேறுபாடுகளுக்கு ஆலோசனை மற்றும் அறிவுரைகள் வழங்கிப்பட்டு வருகிறது. மது பழக்கத்திற்கு அடிமை ஆனவர்கள் மற்றும் மனநோயிலிருந்து விடுபட மருந்துகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் தனி நபர் மற்றும் இளைஞர்களுக்கான வழிகாட்டியாகவும் இவ்இயக்கம் செயல்பட்டு வருகிறது. இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் Counselling பிரிவில் பணியாற்றி வந்த அருட்சகோதரி ஆன்சி SABS அவர்களுக்கு பிரியாவிடை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து இயக்குநர் தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் தலைமையில் 17-5-2022 நடைபெற்றது. இவ்விழாவில் இல்வாழ்வு இயக்க அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### *மாதர் ஜோதிஸ் இயக்கம்*

இவ்வியக்கத்தின் ஆண்டு விழாவனது 2022 மார்ச் 8 ம் தேதி நடைபெற்றது. அன்றைய தினம் மதியம் 1.45 மணிக்கு பெயர் பதிவும், அதனைத் தொடர்ந்து கலைநிகழ்ச்சிகளும் ஆரம்பமாயின. விழாவை பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அடிகளார் குத்துவிளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்கள். இவ்விழாவிற்கு அருட்சகோதரி சீலியா FCC

அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகைப்புரிந்தார்கள். அருட்சகோதரி அனு SH அவர்கள் வரவேற்புரை ஆற்றினர். பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அடிகளார் துவக்கவுரை ஆற்றினர். பின்னர் திருமதி குளோறி பாய் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். இடை இடையே கலைநிகழ்ச்சிகள் மற்றும் பரிசு வழங்குதல் நடைபெற்றது. இல்வாழ்வு இயக்கத்தில் உதவி ஜெசி CMC அவர்களுக்கு வழங்கப்பட்டது. மறைமாவட்ட அளவில் மாதர் ஜோதிஸ் Best Unit Award புனித தோமையார் ஆலயம், முழுக்கோடுக்கு வழங்கப்பட்டது. Best Unit மற்றும் Best Animator Award பெற்றவர்களுக்கு மாதர் ஜோதிஸ் இயக்கம் சார்பாக வாழ்த்துகளை தெரிவித்து கொள்கின்றேன். திருமதி ஜெகலின் லிஜா அவர்கள் நன்றியுரை வழங்கினார்கள். சுமார் 4.30 மணியளவில்




இயக்குநராக பணியாற்றி வந்த அருட்சகோதரி ஜெயின் றோஸ் CHF அவர்களுக்கு பிரியாவிடை பேரருட்தந்தை தோமஸ் பவத்துபறம்பில் அடிகளரால் வழங்கப்பட்டது. அருட்சகோதரி ஆன்சில் FCC அவர்கள் அருட்சகோதரி ஜெயின் றோஸ் CHF அவர்களை வாழ்த்தி கூறினார்கள். மறைமாவட்ட அளவில் திருமண நிதி உதவி திட்டத்தின் கீழ் பயன் அடைய படந்தாலுமூடு பங்கை சார்ந்த ஒரு நபரை தேர்வு செய்து அவர்களுக்கு 10,000 ரூபாய் இவ்விழாவில் வைத்து வழங்கப்பட்டது. மறைமாவட்ட அளவில் மாதர் ஜோதிஸ் Best Animator Award அருட்சகோதரி மாதர் ஜோதிஸ் கீதத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

### திருமண ஆயத்தப் பயிற்சி

திருமண ஆயத்தப் பயிற்சி வகுப்பானது மே 13 மற்றும் 14 தேதிகளில் இல்வாழ்வு இயக்கம் கல்லுவிளையில் வைத்து நடைபெற்றது. இதில் 10 பேர் கலந்து கொண்டனர். அடுத்த திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்பானது ஜூன் 10 மற்றும் 11 தேதிகளில் கல்லுவிளை இல்வாழ்வு இயக்கத்தில் வைத்து நடைபெறும்.

**அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்**
**இயக்குநர்**




# வின்சென்ட்- தே-பவுல் சபை

***தக்கலை மத்திய சபை***

தக்கலை மத்திய சபையில் வெள்ளி விழாவையொட்டிய "திருவிவிலிய ஒளிச்சுடர்" மறைமாவட்டம் வாரியாக ஒவ்வொரு ஆலயத்திற்கும் எடுத்துச் செல்லப்படுகிறது.

***நித்திரவிளை வட்டார சபை***



நித்திரவிளை வட்டார சபைக்கு உட்பட்ட சிறுமலர் பெண்கள் கிளைச்சபையில் சுயதொழில் கடன் உதவி திட்டம் வாயிலாக மூன்று நபர்களுக்கு ரூ.10000 வீதம் வழங்கப்பட்டது. ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தலைமையில் கிளைச் சபை தலைவி சகோதரிமேரி அவர்கள் முன்னிலையில் இந்நிகழ்வு நடைபெற்றது. ஜெய மாதா ஆண்கள் கிளைச் சபை சார்பாக 6 நபர்களுக்கு Rs.10000 வீதம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வானது ஆன்மீக ஆலோசகர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அடிகளார் தலைமையில் கிளை சபை தலைவர் சகோ. அலெக்ஸாண்டர் மற்றும் வட்டாரசபை தலைவர் சகோ. ரசல்ஜாண் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது.

**தகவல் சேகரிப்பு**
**D. P. ஷாஜி**
**தகவல் தொடர்பு அலுவலர்**

# கன்னியாகுமரி
# சமூக சேவை சங்கம்

### *பணியேர்ப்பு விழா*

மே மாதம் 25ம் தேதி கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் புதிய துணை இயக்குநராக அருட்தந்தை மகேஷ் அவர்கள் பணியேற்றுக்கொண்டார். அருட்தந்தை அவர்களை KKSSS இயக்குநர் அருட்தந்தை தாமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் சால்வை அணிவித்து வரவேற்று பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

### *CTWWC Training*

Changing the way we care திட்டத்தின் திட்டமிடல் பயிற்சி வகுப்பானது 15-05-2022 மற்றும் 16-05-2022 தினங்களில் KKSSS ஒருங்கிணைப்பில் KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. இப்பயிற்சியில் கன்னியாகுமரி மாவட்டத்தை சார்ந்த நான்கு மறைமாவட்டத்தின் சமூக சேவை நிறுவனத்தினரும் திருச்சி சமூக சேவை நிறுவனத்தினரும் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை CRS திட்ட அலுவலர்கள் Dr. மனோரஞ்சன்



மற்றும் திருமதி நிவேதிகா வழிநடத்தினார்கள். இப்பயிற்சியில் CTWWC திட்டத்தின் குறிக்கோள் மற்றும் MEAL பற்றி விவாதிக்கப்பட்டது. இரண்டாம் நாள் பயிற்சி முடிவில் வருங்கால செயல்பாடுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இறுதியில் TASOSS இணை இயக்குநர் அருட்தந்தை ஆரோக்கிய சாமி அவர்கள் நன்றி கூறி பணியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் KKSSS இயக்குநர் தந்தை உட்பட குழித்துறை, மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக பணி இயக்குநர்கள் மற்றும் CTWWC திட்ட பணியாளர்கள் என 12 நபர்கள் கலந்து கொண்டனர்.

### பெற்றோரின் கடமைகள்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கமானது குடும்பத்தை வலுப்படுத்தும் பிரசாரத்தை காரோடு மற்றும் மூக்கூட்டுக்கல் பகுதிகளில் உள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்காக மே மாதம் 17 மற்றும் 19 தேதிகளில் மேற்கொண்டது. இப்பிரசாரத்தை CTWWC பணியாளர்கள் வழி நடத்தினார்கள். குடும்பத்தின் முக்கியத்துவம், உறவுகளின் முக்கியத்துவம், குழந்தை வளர்ப்பு போன்றவை பிரச்சாரத்தில் இடம்பெற்றன.




கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் ***CTWWC*** திட்டத்தின் கீழ் கிராமங்களில் குடும்பம் மற்றும் உறவுகளின் முக்கியத்துவம் குறித்து காரோடு மற்றும் ஆறுகாணி பகுதிகளில் மே 18 மற்றும் 23 தேதிகளில் வகுப்புகள் நடைபெற்றது. இத்திட்டதின் ஒருங்கிணைப்பாளர் ***Sr.***மெரின் றோஸ் தலைமையில் நிகழ்ச்சியை ஒருங்கிணைக்கப்பட்டன.

### சர்வதேச குடும்ப விழா

சர்வதேச குடும்ப தினமானது KKSSS சார்பில் ***CTWWC*** திட்டத்தின் கிழ் 17.05.2022 ஆம் தேதி SAFP பயனாளிகளுக்காக "குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்கு மற்றும் முக்கியத்துவம்" என்னும் தலைப்பின் கீழ் அத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயராஜன் அவர்களால் நடத்தப்பட்டது. இவ் வகுப்பில் 250 நபர்கள் கலந்து கொண்டனர்.

### குடும்பம் ஒன்றை காப்போம்

கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் கீழ் செயல்படும் "குடும்பம் ஒன்றை காப்போம்" திட்டத்தின் புதிய பயனாளிகளுக்கான விழிப்புணர்வு முகாம் கல்லுவிளை அரங்கத்தில் வைத்து மே 17 தேதி நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. விஜயராஜன் அவர்கள் நிரந்தர வருமானத்திற்காக, சுயதொழில் அவசியம் என வலியுறுத்தி, ஆடு, மாடு கோழி வளர்த்தல் போன்றவற்றைப் பற்றிப் பேசினார். சுயதொழில் இருக்கும் இடத்தில் வீட்டில் முன்னேற்றம் இருக்கும் என வலியுறுத்தினார்.

### *நலிந்தோருக்கு நலத்திட்ட உதவி*

தக்கலை மறைமாவட்டத்துக்குட்பட்ட செங்கோட்டை, பிரானூர் பார்டரில் இயங்கும் புலரி சமூக சேவை தொண்டு நிறுவனத்தில் முப்பெரும் விழா நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்து பறம்பில் நிகழ்விற்கு தலைமையேற்றார். நிகழ்வில் KKSSS இயக்குநர் தந்தை கலந்து கொண்டதோடு 250 குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். சிறப்பு விருந்தினராக தென்காசி D.S.P மணிமாறன் அவர்கள் கலந்து கொண்டார்.

### *வீடில்லாதோருக்கு வீடு*

தக்கலை மறை மாவட்டத்தின் 25 ஆவது வெள்ளி விழாவை முன்னிட்டு கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் 25 வீடுகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரப்படுகிறது. தென்காசி மிஷன் பகுதிக்கு உட்பட்ட மேக்கரை பகுதியை சார்ந்த நபர் ஒருவருக்கு வீடு அமைத்துக் கொடுக்கும் பணி நடைபெற்று வந்தது. பணி நிறைவடைந்ததை முன்னிட்டு



மே 7 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டு, வீட்டுச்சாவியும் பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டது. KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் பூவத்துமூட்டில் அவர்கள் இந்நிகழ்வை நடத்தி வைத்தார். மேக்கரை ஆலய பங்குதந்தை தாமஸ் தக்கலை அவர்கள் நிகழ்வில் உடனிருந்தார்.

**அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்**

**செயலர்**

# St. Alphonsa College of Arts and Science

## புனித அல்போன்சா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
### சூசைபுரம் கருங்கல்

***விளையாட்டு விழா***

05.05.2022 விளையாட்டு விழா சிறப்பிக்கப்பட்டது. நிகழ்வில், மாவட்ட விளையாட்டு நலத்துறை அலுவலர் திரு. டேவிட் டேனியல், பெங்களூர் எம். இ. ஜி இந்திய ராணுவ அமைப்பு இயக்குனர் திரு பார்த்தீபன், சமூக சேவகர் பினோ தேவராஜ், ஓய்வு பெற்ற மேஜர் டோனர் சலீம் டி.ஜி. ஏன். டி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



***கல்லூரி ஆண்டு விழா***

கல்லூரி ஆண்டுவிழா 7.5.2022 அன்று சூசைபுரம் APJM பள்ளிக்கூட மைதானத்தில் வைத்து நடத்தப்பட்டது. நிகழ்வில் சிறப்பு விருந்தினராக, திரைப்படை இயக்குநர் நாஞ்சில் அன்பழகன் அவர்கள் பங்கேற்றார்கள். மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள் நிகழ்வில் பங்கேற்றார்.

***கவின் கலை விழா***

மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன், கவின் கலைவிழா நிகழ்வானது 25.04.2022 அன்று கல்லூரி பன்னோக்கு அரங்கத்தில் வைத்து நடத்தப்பட்டது. நிகழ்வில் எழுத்தாளர் குமரி ஆதவன் அவர்கள் கலந்து

கொண்டார்கள்.

***முதியோர் இல்ல சந்திப்பு***

கல்லூரி மாணவர்களிடையே பிறரன்பு ஆர்வத்தைத் தூண்டும் நோக்குடன், வணிகவியல் துறை மாணவர்களின் சார்பாக புனித மரியாள் முதியோர் இல்லமானது 17.05.2022 அன்று சந்திக்கப்பட்டது.

***தேசிய கருத்தரங்கம்***

கணிதத்துறை சார்பாக தேசியக் கருத்தரங்கமானது கல்லூரி பன்னோக்கு



அரங்கத்தில் வைத்து 12.05.2022 அன்று நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினராக கொச்சி, புனித ஆல்பர்ட் கல்லூரி கணிதவியல் பேராசிரியர் முனைவர் ஆன்றோ அவர்கள் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்வுகள் அனைத்திலும், கல்லூரித் தாளாளர், பேரருட்தந்தை ஆன்டணி ஜோஸ், முதல்வர் முனைவர் ஐசியாஸ் மற்றும் துணை முதல்வர் சிவநேசன் ஆகியோர் கலந்து கொண்டதோடு, நிகழ்வுகளுக்கான ஒழுங்கமைவுகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

**பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ்**

**தாளாளர்**



# சென்னை சங்கமம்

தக்கலை மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் திருத்தொண்டு பணி குழுவின் சார்பில் சென்னை சங்கமம் மே 1 ஆம் தேதி நடைபெற்றது. சென்னையில் வைத்து நடைபெற்ற நிகழ்வில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் மற்றும் ஓசூர் மறை மாவட்ட ஆயர் மார் செபாஸ்டின் போழலிப்பறம்பில் ஆண்டகைகள் ஆகியோர் பங்கேற்றனர். திருப்பலி, முதல் திருவிருந்து வழங்குதல், மக்கள் சந்திப்பு போன்ற நிகழ்வுகளுடன் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி. படந்தாலுமூடு, பாலப்பள்ளம், பரைக்கோடு, பிலாங்காலை, அன்னிக்கரை, வாறுதட்டு, அதங்கோடு மற்றும் முழுக்கோடு பங்குகளிலிருந்து சென்னையில் வாழும் மக்கள் இதில் பங்கேற்றார்கள். அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். குறிப்பாக முழுக்கோடு திரு ஜோஸ் ராஜ் குடும்பத்தாருக்கும் முகப்பேர் திருச்சிலுவை மறைவட்ட ஆலயப் பங்குதந்தை ஜிஜோ துண்டத்தில் அவர்களுக்கும் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிகள். நிகழ்வை முன்நின்று அருட்தந்தை சுமேஷ் மற்றும் அவருக்குத் துணையாக திரு. எட்வின்சன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# மறைமாவட்டச் செய்திகள்

## மறைவட்ட வாரியான அருட்தந்தையர் கூட்டம்

2022 மே 12, 13 மற்றும் 16 ஆகிய தேதிகளில் மறைவட்ட வாரியாக அருட்தந்தையர்கள் கூட்டமானது மஞ்சாலுமூட்டில் வைத்து மஞ்சாலுமூடு, களியல் மற்றும் ஆறுகாணி மறைவட்டங்களுக்கும், படந்தாலுமூட்டில் வைத்து நித்திரவிளை மற்றும் படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும், சங்கமத்தில் வைத்து தக்கலை-பிலாங்காலை மற்றும் சூசைபுரம் மறைவட்டங்களுக்கும் நடைப்பெற்றது. இக்கூட்டங்கள் அனைத்தும் இடமாற்றம் பெற்ற அருட்தந்தையர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அமைந்திருந்தது. இடமாற்றம் பெற்ற அருட்தந்தையர்கள் தங்கள் அனுபவங்களையும சிரமங்களையும் பகிர்ந்து கொண்டனர். கூட்டங்கள் அனைத்தும் மறைவட்ட அருட்தந்தையர்கள் ஏற்பாடு செய்தார்கள். குருகுல முதல்வர் அவர்கள் தலைமை தாங்கினார்.

## ராஜாபுதுக்குடி – கயத்தாறில் மருத்துவ முகாம்

திருநெல்வேலி மற்றும் கயத்தார் மிஷனில் உள்ள அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகள் 2022 மே 29 ஆம் தேதி ராஜபுதுக்குடி புனித பவுல் சிஎஸ்ஐ ஆலய வளாகத்தில்



ஒரு நாள் இலவச மருத்துவ முகாம் ஏற்பாடு செய்தார்கள். கேரளா பச்சாவில் உள்ள லூர்து மாதா மருத்துவமனையிலிருந்து 3 மருத்துவர்கள் மற்றும் ஊழியர்கள் கொண்ட குழு வந்தனர். SABS இன்-ஷந்தால் மாகாண தலைவி அருட்சகோதரி ரோஸ் மார்ட்டின், முகாமிற்கு வருகை தந்தார். கிராமத்தைச் சேர்ந்த 200க்கும் மேலானவர்கள் இதன் வழியாக பயனடைந்தனர். நிறைவு நிகழ்வின் போது தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் மற்றும் ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்துங்கல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- **ராஜாபுதுக்குடி – கயத்தாரில் வாடகை வீடு மந்திரிப்பு**

  2002 மே 29 அன்று மாலை 5.00 மணிக்கு ராஜாபுதுக்குடியில் (கயத்தாறு) புதிதாக நியமிக்கப்பட்ட அருட்தந்தை ஜோமோன் மங்கலமடம் அவர்களின் வாடகை இல்லத்தை அங்குள்ள அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் மூன்று குடும்பங்கள் முன்னிலையில் குருகுல முதல்வர் அருட்தந்தை தாமஸ் பவத்துபறம்பில் அவர்கள் ஆசீர்வதித்தார். அருட்தந்தை ஜோமோன் மற்றும் அருட்சகோதரன் டிவின் (களப்பணி) அங்கேயே தங்கி தங்கள் பணிகளை மேற்கொள்கிறார்கள்.

## இதர செய்திகள்

- புதிய கைக்காரர்கள் தேர்தல் ஜூன் 2022 இறுதிக்குள் முடிக்கப்பட வேண்டும். ஒரு ஜூலை மாதத்தில் அவர்களுக்கும் பொருளர்களுக்குமான ஒரு நாள் பயிற்சி நடைப்பெறும்.

- இந்தியாவின் அப்போஸ்தலரான புனித தோமையாரின் 1950-வது ஆண்டின் நினைவு தினம் 3 ஜூலை 2022 அன்று வருகிறது. தற்போதைய காலகட்டத்தில் புனித தோமாவின் மாபெரும் நினைவு விழாவை பொருத்தமான முறையில் கொண்டாடுவது நமது கடமையாகும். ஜூன் மாதம் 5 முதல் ஜூலை மாதம் 3, 2022 வரை நமது மறைமாவட்டத்தில் இந்த மாபெரும் நிகழ்வைக் கடைப்பிடிக்க முடிவு செய்துள்ளோம்.

# மறைவட்டச் செய்திகள்

## படந்தாலுமூடு

### ▶ புனித மத்தேயு ஆலயம் – அண்ணிக்கரை

மாதாவின் வணக்க மாதத்தை முன்னிட்டு 19.05.2022 முதல் 31.05.2022 வரை எல்லா நாட்களிலும் மாலை 6 மணிக்கு ஜெபமாலை திருப்பலியும் நடைபெற்றது.

17.05.2022 முதல் 22.05.2022 வரை விசுவாச பயிற்சி விழாவானது சிறப்பான முறையில் நடைபெற்றது. அருட்சகோதரர்கள் ஜாண் மற்றும் காட்வின் ஆகியரோ VPV ஐ சிறப்பாக முறையில் வழி நடத்தினார்கள்.

23.05.2022 அன்று விசுவாச பயிற் விழாவில் கலந்துகொண்ட மாணவர்களுக்கான ஒருநாள் இன்ப சுற்றுலா நடைபெற்றது. நட்டாலம் முட்டிடிச்சான் பாறை, அரைப்பள்ளி, வட்டக்கோட்டை, கன்னியாகுமரி போன்ற இடங்களை மாணவர்கள் கண்டு களித்தனர்.

பணியிட மாறுதல் பெற்ற அருள்தந்தை ஜோஸ் புரையிடத்துக்குந்தேல் அவர்களை பங்குதந்தை மற்றும் பங்குமக்கள் இணைந்து புதிய பணித்தளமான சூசைபுரம் ஆலயத்திற்கு வழியனுப்பி வைத்தனர்.

### ▶ புனித பவுல் ஆலயம் – தெற்றியோடு

29-05-2022 அன்று புதுப்பிக்கப்பட்ட ஆலயத்தில் வைத்து அருட் தந்தை அகஸ்டின் தலோடில் அவர்கள் தலைமையில் அருட்தந்தையர்கள் பிரின்ஸ் மாலியில், அனில்ராஜ் அபிலாஷ் சேவியர் ராஜ், தோமஸ் புன்னத்தானத்து இணைந்து திருப்பலி நிறைவேற்றினர். இந்த ஆடம்பர திருப்பலியின் வேளையில் 2 குழந்தைகள் இயேசுவின் திரு உடலையும் திரு இரத்தத்தையும் முதன்முறையாக ஆன்மீக உணவாக பெற்றுக்கொண்டனர்.

விசுவாசப் பயிற்சி விழாவானது, மே 16, 2022 முதல் மே 21

ஆம் தேதி வரை நடைபெற்றது. தினமும் மாலை 4 மணிக்கு ஆரம்பித்த பயிற்சியானது 6.30 மணிக்கு நிறைவடைந்தது. அருட்சகோதரர் சுனில் அவர்கள் சிறப்பாக செயல்பட்டு, குழந்தைகளுக்கு விசுவாச உண்மைகளைப் பயிற்றுவித்தார்.



- **புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம் – கழுவந்திட்டை**

*14.05.2022* அன்று படந்தாலுமூடு ஆலயத்தில் வைத்து நடைபெற்ற ஐந்து முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ள ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பில் அனைத்து ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

*21.05.2022* அன்று அருள்தந்தை ஜஸ்டின் சேறுவேலில் அவர்கள் புதிய பங்குத்தந்தையாக பொறுப்பேற்றுக்கொண்டார். அன்றைய தினம் பணியிட மாற்றம் பெற்ற பேரருட்தந்தை தாமஸ் சத்தியநேசன் அவர்களை பங்கு மக்கள் வழி அனுப்பி வைத்தனர்.

# மஞ்சாலுமூடு

## திருகுடும்ப ஆலயம் – முக்கூட்டுகல்

முக்கூட்டுகல் திருகுடும்ப ஆலயத்தில் 8.5.2022 அன்று புதிய மண்டபம் திறப்பு விழா நடத்தப்பட்டது. அருட் தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் மந்திரித்துத் திறந்து வைத்தார்.




## புனித பெனிடிக் ஆலயம் – பென்கிரி

7.05.2022 அன்று புனித பெனடிக்ட் ஆலயம் பென்கிரியைச் ஆலயத்தைச் சேர்ந்த மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் புனித தேவசகாயம் பிள்ளையின் திருதலங்களுக்கு புனித யாத்திரை சென்றார்கள். இப்புனித பயணத்தை பங்கு தந்தை அவர்கள் ஒருங்கிணைத்து வழிநடத்தினார்கள்



## களியல்

### ▶ புனித சூசையப்பர் ஆலயம் – காரோடு

மறைக்கல்வி மாணவர்களுக்கான விசுவாச பயிற்சிவிழா மேய் மாதம் 15 தேதி முதல் 21 வரை நடை பெற்றது. முதல் நாள் காலை ஞாயிறு திருப்பலி முடிந்தயுடன் மறைக்கல்வி மாணவர்கள் முன்னிலையில் பங்குதந்தை அஜீஷ் அட்டியில் அவர்களால் VPV கொடியேற்றப்பட்டது. மாணவர்கள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் புனிதரின் பெயர்கள் காடுக்கப்பட்டது, தினமும் காலை 9:00 மணிக்கு திருப்பலியும் அதை தொடர்ந்து பயிர்ச்சி வகுப்புகளும் நடைபெற்றன. மாலை 3:00 மணியளவில் அனைத்து நிகழ்ச்சிகளும் முடிவடைந்து அடுத்த நாளுக்கான செயல்பாடுகள் பகிர்ந்து அளிக்கப்பட்டன. கடைசி நாளாகிய மேய் 21 சனிக்கிழமை அன்று பவனி நடைபெற்றது.

28-05-2022 அன்று மறைக்கல்வி மாணவர்களின் ஒருநாள் சுற்றுலா நடைபெற்றது. புனித தோமையார் நிறுவிய அரைப்பள்ளி, காற்றாடிமலை மற்றும் பல இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர்.

### ▶ புனித 2–ம் ஜாண்பால் ஆலயம் – குலசேகரம்

குலசேகரம் இரண்டாம் ஜாண்பால் ஆலயத்தில் இறைப்பணி ஆற்றிய அருட் சகோதரிகள் மரியாம்மா SABS மற்றும் லிஸ்டன் SABS ஆகியோரின் பிரியாவிடை நிகழ்வானது 15.5.2022 அன்று ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மேலும் பங்குத்தந்தை சாஜன் நெட்டப்பொங்ங்பு அவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வும் நடந்தது.

### ▶ புனித லூர்து அன்னை ஆலயம் – சேனங்கோடு

சேனங்கோடு, புனித லூர்து அன்னை ஆலயத்தில் இறைப்பணி ஆற்றிய பங்குத்தந்தை சாஜன் நெட்டப்பொங்ங்பு அவர்களின் பிரியாவிடை நிகழ்வானது 22.5.2022 அன்று ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. பங்குதந்தை அருட்தந்தை தமது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.

## தக்கலை–பிலாங்காலை

- **புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயம் – பிலாங்காலை**

விசுவாச பயிற்சி விழா 3 நாட்கள் நடைபெற்றது. பங்குத்தந்தை அனைவரையும் வரவேற்று குழந்தைகளுக்கு சிலுவை அடையாளம் வரைதல் விசுவாச பிரமாணம் ஆண்டவர் கற்பித்த ஜெபம் ஆகியவற்றை படிக்க வைத்தார். ஆசிரியர்கள் வகுப்பு நடத்தினர். பங்கு தந்தையின் வழிகாட்டுதலில் அருட்சகோதரர் டோனி அவர்கள் VPV ஐ வழிநடத்தினார். 3 நாட்களும் task கொடுத்து நன்றாக செய்யும் குழுவிற்கு மதிப்பெண் அளித்து மாணவர்களை உற்சாகமூட்டினார். குழந்தைகளுக்கு பல விளையாட்டுக்கள் நடத்தி



அதன் மூலம் பத்து கட்டளைகள், திருச்சபை கட்டளைகள், நல்ல பாவசங்கீர்த்தனத்துக்கு வேண்டிய ஐந்து காரியங்கள், பைபிள் வசனங்கள் போன்றவற்றை குழந்தைகளின் மனங்களில் பதிய வைத்தார். விசுவாசப்பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்கள் புனித தேவசகாயம் பிள்ளையின் திருத்தலங்களுக்கு ஒரு புனித பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

மே மாத மாதா வணக்கம் ஒவ்வொரு நாளும் ஆலயத்தில் சிறப்பிக்கப்பட்டது. காலை 6.30 மணிக்கு திருப்பலி மாலை 6 மணிக்கு ஜெபமாலை ஆகியவை நடைபெற்றன. கடைசி 10 நாட்கள் மாலையில் பங்குத்தந்தை தலைமையில் ஆடம்பர திருப்பலி காணிக்கை பவனி, ஜெபமாலை மற்றும் நேர்ச்சை உணவு

கொடுத்தல் நடந்தன. கடைசி நாள் அன்று ஆலய வளாகத்தில் தேர்ப் பவனி நடைபெற்றது.

### புனித சவேரியார் ஆலயம் – கைசாலவிளை

விசுவாச பயிற்சி விழா நடைபெற்றது. இதில் 45 மாணவர்கள் கலந்து கொண்டனர். பங்கேற்ற அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. மாணவர்கள் புனித தேவசகாயம் பிள்ளையின்



திருத்தலங்களுக்கு புனித பயணம் அழைத்து செல்லப்பட்டனர். இதில் பங்குதந்தை பேரருட்தந்தை தோமஸ் தெக்கேத்தலா CMI ஆசிரியர்கள் கலந்து கொண்டு வழிநடத்தினார். மே மாத மாதா வணக்கம் ஒவ்வொரு நாளும் ஆலயத்தில் வைத்து மாலை 6 மணிக்கு ஜெபமாலையுடன் நடைபெற்றது.

## சூசைபுரம்

### புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம் – சூசைபுரம்

புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தின் பங்கு குடும்ப விழாவானது 25-04- 2022 திங்கட்கிழமை முதல் மே 1 ஆம் தேதி வரை நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் திருப்பலியும் நவநாளும் நடைபெற்றது.

சிறப்பு நிகழ்வுகளாக முதல் நாள் திருக்கொடியேற்றுதல் நடந்தது, மூன்றாம் நாளில், இன்னிசை விருந்து இடம் பெற்றது, ஆறாம் நாள் திருவிழாவின் போது, 17 குழந்தைகள் இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் முதன்முதலாகப் பெற்றனர்.



**கிறிஸ்து அரசர் ஆலயம் – பாலப்பள்ளம்**

மே 1 ஆம் தேதி அனைத்து உறவியங்களின் சிறப்பு கூட்டம் ஆலய வளாகத்தில் வைத்து மாலை 4.30 மணிக்கு கலை நிகழ்ச்சிகளோடு நடைபெற்றது. பங்குத்தந்தை தலைமை தாங்கினார். பின்னர் அனைத்து உறவியங்களும் தத்தம் உறவிய உறுப்பினர்களுடன் இணைந்து கூட்டத்தை சிறப்பாக நடத்தினர்.

மே இரண்டாம் தேதி எடத்துவாத் திருப்பயணம் மேற்கொள்ளப்பட்டு திருத்தல பலிபீடத்தில் பங்கு மக்களின் கருத்துக்களுக்காக திருப்பலியானது ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மே 8ஆம் தேதி, 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ மாணவியருக்கான வாழ்க்கை வழிகாட்டி முகாம் நடைபெற்றது. அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் முகாமை வழிநடத்தினார். இந்த சிறப்பு கருத்தமர்வு பங்குத்தந்தை ஜாண்பால் அடிகளார் தலைமையில் காலை 9 மணி முதல் மதியம் 12 30 மணி வரை நடந்தது. பங்கு பொதுநிலையினர் பேரவையின் முதல் செயல்பாடான இந்த முகாமை செவ்வனே ஏற்பாடு செய்ததற்கு இதன் தலைவர் திரு. அருள் அவர்கள் சிறப்பு பாராட்டு பெற்றார். மே 17 ஆம் தேதி பங்குத்தந்தை ஜான்பால் அவர்களின் பிறந்தநாள் பங்கின் சார்பில் மிக சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மே 22 முதல் 29 வரை பங்கில் விசுவாச பயிற்சி விழா கோலாகலமாக நடைப்பெற்றது. அருட்சகோதரி லின்ஸ் மற்றும் அருட்சகோதரர் காட்வின் ஆகியோர் விபிவி-யை முன்னின்று வழிநடத்தினர். எட்டு உறவியங்களின் சார்பாகவும் காலை மற்றும் மதியமும் உணவு வழங்கப்பட்டது. விசுவாசப் பயிற்சி விழாவை முன்னிட்டு மே 24 ஆம் தேதி ஒருநாள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளப் பட்டது.

மாதாவின் வணக்க மாதத்தை முன்னிட்டு மாதர் ஜோதிஸ் சார்பில் மே 27 முதல் 10 நாட்கள் ஆலய கெபியில் வைத்து சிறப்பு ஜெபமாலை நடத்தப்பட்டது.

மறைமாவட்ட அளவில் நடைபெற்ற போட்டியில் பங்கின் இளையோர்கள் பங்கெடுத்து மறைமாவட்ட அளவில் இரண்டாம் பரிசைப் பெற்றனர்

## நித்திரவிளை

- **புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை**

முஞ்சிறை புனித ஜார்ஜியார் திருத்தலத்தில் 15-05-2022 முதல் 22-05-2022 வரை VPV நடைபெற்றது. அருட்தந்தை ஜோமோன் அவர்களுடன் இணைத்து அருட்சகோதரி மேரிராணி SD,



ஆசிரியை டெய்சி, சினேகலதா, ஷாலினி ஆகியோர் பயிற்சியை முன்னின்று வழி நடத்தினர். எட்டு நாட்களும் ஒவ்வொரு உறவியமாக காலை, மதியம், மாலை என்று உணவுகளும் சிற்றுண்டியும் வழங்கி சிறப்பித்தனர். காலை 9 மணிக்கு காலை ஜெபத்துடன் பயிற்சி வகுப்புகள் ஆரம்பமாகி மாலை 4 மணிக்கு இறுதி ஆசீருடன் முடிவடைந்தது. மாணவர்கள் நான்கு குழுக்களாக பிரிக்கப்பட்டு ஆடல், பாடல், புதிர்கள், விடுகதைகள், விளையாட்டுகள் என்று பல போட்டிகளில் விளையாடி மகிழ்ந்தனர். சுமார் 60 மாணவர்கள் இதில் கலந்து கொண்டனர். விசுவாச பயிற்சி வகுப்புகளில் சிறப்பாக பங்கெடுத்த அனைத்து மாணவர்களுக்கும் இறுதி நாளன்று பரிசுகள் வழங்கப்பட்டன. 22 ஆம் தேதி காலை திருப்பலி பின் ஒருநாள் திருப்பயணம் மற்றும் இன்ப சுற்றுலா அழைத்துச் செல்லசப்பட்டனர்.

22 ஆம் தேதி புனித வின்சென்ட் தே பவுல் சபை சார்பில் பொன்விழா வஜனஜோதி புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து நமது ஆலயத்திற்கு வர அதனை வரவேற்று ஜெபித்து 23 ஆம் தேதி படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

22 தேதி காலை திருப்பலி பின் திருத்தலத்தின் பங்குத்தந்தையாக சுமார் 3 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றி அருள்தந்தை ஜோமோன் அவர்களுக்கு பிரிவு உபசார விழா நடைபெற்றது. பங்கின் கைக்கரான் திரு வின்சென்ட் ராஜ் அவர்கள் வாழ்த்திப் பேசி நினைவு பரிசு வழங்கினார். முன்னாள் கைக்கரான் திரு சுகுமாரன் அவர்களும் வாழ்த்திப் பேசினார். மறைக்கல்வி இயக்கத்தின் சார்பில் திருமதி டெய்சி அவர்களும் வாழ்த்தி பேச ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பரிசு வழங்கினார். இறுதியாக தலைமை ஆசிரியர் திருமதி சினேகாலதா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. இறுதியில் தந்தை அவர்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

புதிய அருள்தந்தை பொறுப்பேற்பு : 24 ஆம் தேதி மதியம் 2

மணிக்கு புது பங்குதந்தை அனில்ராஜ் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. பேரருட்தந்தை ஜோஸ் முட்டதுப்பாடம் அவர்கள் பொறுப்பு ஏற்பு அறிக்கையை வாசித்து அருள்தந்தை அனில்ராஜ் அவர்கள் பொறுப்பு ஏற்கச் செய்தார். பின் ஆலயத்தின் பொறுப்புகளை தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்டார். மாலை 5 மணிக்கு முன்னாள் பங்குதந்தையை பங்கு மக்கள் அனைவரையும் ஜெபித்து அவரின் புதிய மறைத்தளமாகிய காயத்தாறுக்கு வழியனுப்பினார்கள்.

- **அமல மரிய ஆலயம் – சீனிவிளை**

18.5.2022 முதல் 22.5.2022 வரை விசுவாச பயிற்சி விழா மிக சிறப்பாக நடைப்பெற்றது அருட் சகோதரர்கள் ஜாண் மற்றும் காட்வின் ஆகியோர் சிறப்பாக வழிநடத்தினார். 22ஆம் தேதி VPV பவனி மிக அருமையாக நடைபெற்றது. மாணவர்கள் அனைத்து நாட்களிலும் மிக சிறப்பாக பங்கெடுத்தனர். 23 ஆம் தேதியன்று இன்ப சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது.

**தகவல் சேகரிப்பு: திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா, திருமதி, ஷைலா | மெரின் சுஜித்**

## தென்காசி மறைத்தளம்

- **புலரி கல்வி மற்றும் தொண்டு அறக்கட்டளை ஆண்டுவிழா மற்றும் மதத்தலைவர்கள் சந்திப்பு**

தென்காசி மறைத்தள வெள்ளி கொண்டாட்டங்களுக்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாக, புலரி சமூகசேவை நிறுவனமும் கல்வி நிறுவனம் சார்பில் 28-05-2022 அன்று மாலை 5 மணியளவில் ஆண்டுவிழா சிறப்பிக்கப்பட்டது. இது சமூக மதநல்லிணக்க விழாவாக கொண்டாடப்பட்டது. இதில் தென்காசி காவல்துறை அதிகாரி திரு ஆர்.கிறிஸ்ணராஜ் IPS, கடையநல்லூர் ஊராட்சி தலைவர் திரு. ராஜகிருஷ்ணமுரளி, தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் மற்றும் பல மதத்தலைவர்கள் பங்கேற்றனர். புலரி சமூக சேவை




மையத்தின் இயக்குனர் அருட்தந்தை தோமஸ் தக்கலை அவர்கள் அனைத்தையும் ஒருங்கிணைந்து நடத்தினார். இதில் 500 க்கும் மேற்பட்டோர் பங்கெடுத்து பயன் அடைந்தனர். இதில் பல நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | |
|---|---|
| புனித தேவசகாயம் பிள்ளை புனிதராக அறிவிக்கப்பட்டதற்காக தேசிய அளவிலான நன்றி திருப்பலி. | - ஜூன் 05 |
| புனித தோமையார் மாத தொடக்கவிழா | - ஜூன் 05 |
| அருட்தந்தையர்களுக்கான புனித தோமையார் பற்றிய கருத்தரங்கு | - ஜூன் 18 |
| அருட்தந்தையர் கூட்டம் | - ஜூன் 20 |
| துறைகளுக்கிடையேயான கூட்டம் | - ஜூன் 23 |
| இயேசுவின் திரு இதய திருநாள் | - ஜூன் 24 |
| இளங்குருமட திறப்புவிழா | - ஜூன் 25 |

| BIRTHDAY OF REV. FATHERS- JUNE - 2022 | |
|---|---|
| Fr. Anil Raj Dominic | 02 |
| Fr. Johnsilal Arackaparampil | 03 |
| Fr. Justin Cheruvelil | 04 |
| Fr. Jins Pulingappallil MCBS | 11 |
| Fr. Anoop (Chacko) Karingadu MCBS | 13 |
| Fr. Clement Rockey | 15 |
| Fr. Sajan Nettaponghu | 21 |
| Fr. Reju Puthuparampil MCBS | 23 |
| Fr. Mijo Puthenpurayil | 25 |

| FEASTDAYS OF REV. FATHERS - JUNE - 2022 | |
|---|---|
| Fr. Justin Sutheesh | 01 |
| Fr. Antony Jose | 13 |
| Fr. Antony Chundelikkatt | 13 |
| Fr. Antony Madapurackal | 13 |
| Fr. Antony Mahesh | 13 |

## BISHOP'S ENGAGEMENTS JUNE 2022

| DAT | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Wed | 03.00 pm | Bishop's House: Sangamam Garment unit evaluation meeting |
| 2 | Thu | 07.00 am | Mukkoottukal: Minor seminary vocation camp |
| 3 | Fri | 10.00 am<br>08.30 pm | Bishop's House: Liturgy Translation committee meeting Online: Major<br>Archeparchial assembly committee meeting |
| 4 | Sat | 02.00 pm<br>04.00 pm | Kalluvilai: Catechism HM's meeting<br>Kalluvilai: Kuzhandai Isso Iyakkam animaters meeting |
| 5 | Sun | 10.00 am<br>04.00 pm | Thakalivilai: First Holy Communion Qurbana and Inaugurating of St.Thomas Month.<br>Kattadimalai: St Devasahayam Thanks giving Holy Qurbana |
| 6 | Mon | 06.00 pm | Kaliakkavilai: Marriage Reception |
| 7 | Tue | 03.00 pm | Kalluvilai: Diocesan Health Commission meeting |
| 8 | Wed | 09.30 am<br>03.00 pm | Bishop's House: Curia meeting<br>Bishop's House: Cathedral construction committee meeting |
| 9 | Thu | 10.30 am | Thuckalay: Jubilee holy Qurbana at CMC Provincial House |
| 10 | Fri | 09.30 am<br>06.00 pm | Kalluvillai: Meeting at KKSSS<br>Bishop's House: Holy Qurbana by new Priests |
| 11 | Sat | 04.00 pm | Bishop's House: Meeting with Nabaard Manager |
| 12 | Sun | | Bishops House |

| | | | |
|---|---|---|---|
| 13 | Mon | 10.00 am | Vettumani: St Antony's Shrine Holy Qurbana |
| | | 03.00 pm | Soosaipuram: Visit to Alphonsa college |
| 14 | Tue | | Thodupuzha: Visit to Benefactors |
| 15 | Wed | | Changanaserry: Visit to Benefactors |
| 16 | Thu | | Bishop's House |
| 17 | Fri | 04.00 pm | Soosaipuram: Alphonsa College GB meeting |
| 18 | Sat | 10.00 am | Kalluvilai: Seminar on St Thomas the Apostles to priests and religious |
| 19 | Sun | 07.00 pm | Karode: Kurusady and DNN chapel Blessing |
| | | 02.30 pm | Thiruthuvapuram: Centenary Mariayin Senai Holy Qurbana |
| 20 | Mon | 09.30 am | Sangamam: Recollection and Priests conference |
| 21 | Tue | 10.00 am | Bishop's House: Cathedral Finance committee meeting |
| 22 | Wed | 09.30 am | Bishop's House: Curia meeting |
| 23 | Thu | 08.30 am | Malayady: Marriage Holy Qurbana, Mekodu |
| | | 02.30 pm | Bishops House: Directors of Inter-department meeting |
| 24 | Fri | 04.30 pm | Padanthalumoodu: Feast Day Holy Qurbana |
| 25 | Sat | 10.00 am | Mukkoottukal: Inauguration of Minor seminary academic year and staff meeting |
| 26 | Sun | 04.00 pm | Pallikonam: Feast Day and First Holy communion Holy Qurbana |
| 27 June -04 July | | | St Thomas Feast at Sharjah and Visit to UAE |

**Rev. Fr. Robin Jose, Bishop's Secretary**



**Blessing of Rented House at Rajaputhukkudi, Kayathar Mission, May 29. 2022**



**Medical Camp at Rajaputhukkudi , Kayathar, May 29, 2022**



**First Holy Communion and First Mass in the Renovated Church, Thettiyode, May 29, 2022**



**Mathru Jyothis Annual Day, Kalluvilai,**
**May 8. 2022**



**Kuzhandai Iso Iyakkam, Anniversary, Kalluvilai,**
**May 15, 2022**


**For Private Circulation Only**

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570